
# P5 SA2
# COMPOSITION

வினா 2

*கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.*




| | |
|---|---|
| பள்ளிக்குப் புறப்பட்டு | மின்தூக்கியைப் பயன்படுத்தி |
| பெண்மணி ஒருத்தி | செல்லப் பிராணியுடன் |
| மின்தூக்கியில் சிறுநீர் கழிந்தது | நாற்றம் மூக்கைத் துளைத்தது |
| மூதாட்டி ஆத்திரத்துடன் | வாய்ச் சண்டை மூண்டது |
| சமாதானப்படுத்தி | செய்வதறியாமல் |

Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3, அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

'அ' பிரிவு

**A1 வேற்றுமை**

**Q1** முதல் **Q6** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான **வேற்றுமை உருபு** ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

பார்த்திபன் ஒரு நிறுவனத்தில் உயர் அதிகாரியாகப் பணியாற்றி வந்தான். அங்கிருந்த வேலைப் பளு (Q1)_________ அவன் தன் பெற்றோரைக் கொஞ்சம்கூட கவனிக்கவில்லை. (Q2)_________ பெற்றோர் அவன் அன்பிற்காக ஏங்கி நோய்வாய்ப்பட்டனர். இதை அறிந்த (Q3)_________ உறவினர்கள் அவனுக்கு அறிவுரை கூறினர். (Q4)_________ தங்களின் பிள்ளைகளின் அன்பான உபசரிப்பு மிக முக்கியம் என்பதனை பார்த்திபன் அப்பொழுதுதான் உணர்ந்தான். அவன் (Q5)_________ ஒதுக்கித் தன் பெற்றோரைக் கவனிக்க ஆரம்பித்தான். அவன் அவர்களை (Q6)________ கவனித்து, அவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்தான். சில நாள்களிலேயே அவர்கள் மெல்ல மெல்ல குணமடைந்தனர்.

Q1. (1) காரணத்தை
(2) காரணத்தினால்
(3) காரணத்துக்கு
(4) காணரத்தோடு

( )

Q2. (1) பார்த்திபனின்
(2) பார்த்திபனுக்கு
(3) பார்த்திபனை
(4) பார்த்திபனோடு

( )

Q3. (1) அவனை
(2) அவனுக்கு
(3) அவனோடு
(4) அவனுடைய

( )

Q4. (1) பெற்றோர்களிடம்
(2) பெற்றோர்களுடன்
(3) பெற்றோர்களுக்கு
(4) பெற்றோர்களால்

( )

Q5. (1) நேரத்தை
(2) நேரத்துக்கு
(3) நேரத்துடன்
(4) நேரத்தோடு

( )

Q6. (1) அன்பால்
(2) அன்பில்
(3) அன்போடு
(4) அன்புக்கு

( )

A2 செய்யுள்/ பழமொழி

**Q7** முதல் **Q12** வரையுள்ள செய்யுள்/ பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

Q7. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா ________ அறம்.

(1) முடிந்தது
(2) இயன்றது
(3) உரைத்தது
(4) உணர்ந்தது

( )

Q8. ஒருவர் ____________ இருவர் நட்பு.

(1) விரோதம்
(2) பகை
(3) பொறை
(4) சண்டை

( )

Q9. கற்றது ____________________ கல்லாதது உலகளவு.

(1) கைமண்ணளவு
(2) விண்ணளவு
(3) கையளவு
(4) கடலளவு

( )

Q10. கெடுப்பதூஉம் ______________ சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

(1) கெட்டவர்க்கு
(2) நல்லவர்க்கு
(3) கெட்டார்க்கு
(4) தீயவர்க்கு

( )

Q11. அறிஞர்க்கு அழகு _______________ அடங்கல்.

(1) கேட்டுணர்ந்து
(2) பார்த்துணர்ந்து
(3) படித்துணர்ந்து
(4) கற்றுணர்ந்து

( )

Q12. மந்திரிக்கு அழகு வரும்பொருள் ____________.

(1) சொல்லுதல்
(2) உரைத்தல்
(3) கூறுதல்
(4) கடைபிடித்தல்

( )

**<u>B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்</u>**

பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

கபிலன் ஓர் ஏழைச் சிறுவன். அவனுடைய பெற்றோர் சிறுவயதிலேயே மின்னலால் தாக்கப்பட்டு இறந்துவிட்டனர். நிலச் ***<u>சொந்தக்காரர்</u>*** கபிலன்மீது இரக்கம் கொண்டு தன் வீட்டிலேயே அவன் தங்க அனுமதித்தார். அவருடைய பசுக்களைக் கபிலன் பராமரித்து வந்தான்.

கபிலன் மாடு மேய்க்கும்போது அவனுடைய நண்பன் காசி அவனைச் சந்திக்க வருவது வழக்கம். ஒரு நாள் நண்பகல் நேரத்தில் அதிக வெயிலாக இருந்தது. கபிலன் அதிக நேரம் மாடுகளைக் காடுமேடுகளில் ஓட்டிச் சென்றுகொண்டிருந்தான். அதனால், அவன் மிகவும் களைத்துப்போய் இருந்தான். அவன் தன் ***<u>நண்பனிடம்,</u>*** "காசி! எனக்குக் களைப்பாக இருக்கிறது. நான் இந்த மரத்தடியில் படுத்து உறங்குகிறேன். நீ மாடுகளை எனக்காகப் பார்த்துக்கொள்!" என்றான். காசியும் அதற்குச் சம்மதித்தான்.

சற்று நேரத்திற்குப் பிறகு அருகிலிருந்த புதரிலிருந்து ஒரு நாகப் பாம்பு வெளியே வந்தது. அது, கபிலனுக்கு அருகே சென்று, அவன் தலைக்கு மேல் படமெடுத்து நின்றது. கபிலன் இருக்கும் இடத்தைத் திரும்பிப் பார்த்த காசி, அவன் தலைக்கு நேராகப் படமெடுத்து நின்ற நாகத்தைக் கண்டு அதிர்ச்சி அடைந்தான். சில நிமிடங்கள் கழித்து, நாகம் கபிலனைவிட்டு விலகி மீண்டும் புதருக்குள் சென்றுவிட்டது. உடனே, கபிலனை எழுப்பிய காசி சற்றுமுன் நடந்த அதிசய ***<u>நிகழ்ச்சியை</u>*** அவனிடம் விவரித்தான். அந்தச் செய்தி கிராமத்தில் வேகமாகப் பரவியது. கிராம மக்கள் கபிலன் எதிர்காலத்தில் அரசனாகப் போகிறான் என்பதையே அந்த நாகம் மறைமுகமாகக் காட்டியது என்றனர்.

ஒருநாள் கபிலன் தான் கிராமத்தில் இருக்கும்வரை அரசனாக ஆவது சாத்தியம் இல்லை என்று எண்ணினான். உடனே அவன் யாரிடமும் சொல்லாமல் கிராமத்தை விட்டு வெளியேறினான். அவன் பூரி ஜெகன்னாதர் ஆலயத்தை வந்தடைந்தான். அங்கு வாரிசு இல்லாத பானுதேவர் என்ற மன்னர் கபிலனைச் சந்தித்தார். கபிலனின் பெற்றோர் இறந்துவிட்டதை அறிந்த அவர் அவனைத் தன் மகனாக வளர்த்தார். மன்னர் கபிலனின் அறிவாற்றலையும் நற்பண்புகளையும் கண்டு மனமகிழ்ந்தார். வருடங்கள் பல கடந்தன. தனக்கு வயதாகிவிட்டது என்று உணர்ந்த மன்னர் நாட்டை ஆள எல்லா திறன்களும் கபிலனுக்கு உண்டு என்று எண்ணினார். அவர் கபிலனை அந்த நாட்டு இளவரசனாக முடிசூட்டினார்.

**Q13** முதல் **Q17** வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(10 மதிப்பெண்கள்)

Q13. நிலச் சொந்தக்காரர் ஏன் கபிலனைத் தன்னுடன் தங்க அனுமதித்தார்?

(1) அவன் ஏழைச் சிறுவன் என்பதால்
(2) அவன் பெற்றோர் இறந்துவிட்டனர் என்பதால்
(3) அவனுக்கு உறவினர்கள் இல்லை என்பதால்
(4) அவர் பணக்காரர் என்பதால்

( )

Q14. காசி எதனால் மாடுகளைப் பார்த்துக்கொள்ள சம்மதித்தான்?

(1) கபிலன் தன்னிடம் கேட்டுக்கொண்டான் என்பதால்
(2) கபிலன் அதிக நேரம் மாடுகளை மேய்த்தான் என்பதால்
(3) அப்பொழுது நண்பகல் வேளை என்பதால்
(4) கபிலனுக்குச் சோர்வாக இருந்தது என்பதால்

( )

Q15. கபிலனின் அருகில் சென்ற நாகம் என்ன செய்தது ?

(1) கபிலன் மீது ஏறிச் சென்றது
(2) அவனின் தலைக்கு மேல் நின்று சீறியது
(3) கபிலனின் தலைக்கு மேல் படமெடுத்து நின்றது
(4) புதருக்குள் சென்று அதிசயமாக மறைந்தது

( )

Q16. கபிலன் கிராமத்தில் இருந்து வெளியேறியதன் காரணம் என்ன?

(1) கிராமத்தில் அவனைப்பற்றிய வதந்தி பரவியதால்
(2) மன்னரிடமிருந்து அவனுக்கு அழைப்பு வந்ததால்
(3) கிராமத்தில் இருக்க அவனுக்குப் பயமாக இருந்ததால்
(4) அங்கே மன்னனாக வாய்ப்பில்லை என்று அவன் நினைத்ததால்

( )

Q17. கபிலனுக்கு எப்படி இளவரசன் ஆகும் வாய்ப்பு கிடைத்தது?

(1) மன்னருக்கு வாரிசு இல்லாததால்
(2) மன்னர் தனக்கு வயதாகிவிட்டது என்று உணர்ந்ததால்
(3) மன்னர் கபிலனின் திறமைகளையும் நற்பண்புகளையும் அறிந்ததால்
(4) வாரிசு இல்லாத மன்னர் அவனைத் தன் பிள்ளையாக வளர்த்ததால்

( )

**Q18** முதல் **Q20** வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் **பொருளை உணர்த்தும்** சரியான **சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு.** அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q18. சொந்தக்காரர்

(1) உறவினர்
(2) உரிமையாளர்
(3) முதலாளி
(4) பாதுகாப்பாளர்

( )

Q19. நண்பனிடம்

(1) சகோதரனிடம்
(2) இளையவனிடம்
(3) தெரிந்தவனிடம்
(4) தோழனிடம்

( )

Q20. நிகழ்ச்சியை

(1) நடவடிக்கையை
(2) செயலை
(3) சம்பவத்தை
(4) காட்சியை

( )

B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்


பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

## உட்லண்ஸ் சமூக மன்றம் நடத்தும்
## முத்தமிழ் விழா 2013


**தேதி : 25 செப்டம்பர் 2013**

**நேரம் : காலை 8 மணி முதல் காலை 11 மணி வரை**

**இடம் : உட்லண்ஸ் சமூக மண்டபம்**



பதிவு கட்டணம் : $5.00
பதிவு செய்ய வேண்டிய இறுதி நாள்: 30/8/2011



*பிரிவு: அ பிரிவு (தொடக்கநிலை 1 – 2)*
*: ஆடை அலங்காரப் போட்டி*

*ஆ பிரிவு (தொடக்கநிலை 3 – 4)*
*: பாட்டுப் போட்டி*

*இ பிரிவு (தொடக்கநிலை 5 – 6)*
*: கதை சொல்லும் போட்டி*

- போட்டியில் பங்குபெறும் அனைவருக்கும் கண்கவரும் நினைவுச்சின்னம் கொடுக்கப்படும்.
- மூன்று பிரிவுகளிலும் முதல் நிலையில் வெற்றிப் பெறும் பள்ளிக்கு வெற்றிக் கேடயம் வழங்கப்படும்.



- போட்டிகளின் வெற்றியாளர்கள் தொலைக்காட்சி சிறுவர் நிகழ்ச்சிகளில் பங்குபெற வாய்ப்புப் பெறுவர்.
- விருப்பமுள்ளோர் குமாரி பாமாவைத் தொடர்பு கொள்ளவும்.(தொலைபேசி எண்: 93824648)

மேல் விவரங்களுக்கு
muthamilvizha2011@gmail.com
என்ற மின்னஞ்சல்
முகவரியுடன் தொடர்பு கொள்க.



பரிசுகளுக்கு ஆதரவு:
**சந்திரமுகி நகைக்கடை**

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q21. 'முத்தமிழ் விழா' என்னும் நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர் யார்?

(1) முத்தமிழ் மன்றம்
(2) உட்லண்ஸ் சமூக மன்றம்
(3) சந்திரமுகி நகைக்கடை
(4) உட்லண்ஸ் சமூக மண்டபம்

( )

Q22. இந்நிகழ்ச்சியில் பங்கு பெற விரும்புவோர் என்ன செய்ய வேண்டும்?

(1) 30/8/2013 தேதிக்குள் கட்டணம் ஐந்து வெள்ளி செலுத்தி பதிவு செய்ய வேண்டும்
(2) 30/8/2013 தேதி உட்லண்ஸ் சமூக மண்டபத்திற்கு வர வேண்டும்
(3) குமாரி பாமாவைத் தொடர்புகொள்ள வேண்டும்
(4) மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டும்

( )

Q23. போட்டியாளர்கள் அனைவரும் எவற்றைப் பெறுவர்?

(1) கண்கவரும் நினைவுச் சின்னம்
(2) பரிசுகளும் நினைவுச்சின்னமும்
(3) தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்குபெற வாய்ப்பு
(4) வெற்றிக் கேடயம்

( )

ஃஃ அ பிரிவு முடிவுற்றது ஃஃ

C6 <u>ஒலி வேறுபாட்டுச் சொற்கள்</u>

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| Q24. வனிதா தன் வீட்டுக்கு நடந்து வரும் __________ ஒரு பாம்பைப் பார்த்தாள். அவள் பயந்து அலறிக்கொண்டே ஓடினாள். | Q24. (    ) |
| Q25. புதிதாக வந்த தலைமையாசிரியர் ஆற்றிய__________ மிகவும் சிறப்பாக இருந்தது. அவருடைய பேச்சு எங்களுக்குப் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. | Q25. (    ) |
| Q26. சிராங்கூன் பகுதியில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டுக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்காக __________ மாடுகளும் கன்றுகளும் கொண்டுவரப்பட்டிருந்தன. | Q26. (    ) |
| Q27. என் பள்ளிப்பை மிகவும் __________ இருந்தது. அதனால், நான் சில புத்தகங்களை வீட்டில் வைத்துவிட்டுச் சென்றேன். | Q27. (    ) |
| Q28. சாலை விபத்தில் சிக்கிய மாறனுக்கு __________ எலும்பில் முறிவு ஏற்பட்டது. அதனால், அவன் தொடர்ந்து மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றான். | Q28. (    ) |

| | |
|---|---|
| (1) கனமாக | (2) உறை |
| (3) கணமாக | (4) விழா |
| (5) உரை | (6) வலியில் |
| (7) விலா | (8) காளை |
| (9) காலை | (10) வழியில் |

## D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் 29 முதல் 35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| பேரப்பிள்ளைகள் தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். வேலப்பன் தோட்டத்திற்குச் சென்று அவர்களுடன் பொழுதை (Q29)____________ விரும்பினார். அவரைக் கண்டதும் சிறுவர்கள் அவர் அருகே சென்றனர். | Q29 (   ) |
| "உங்களில் யார் மிகவும் (Q30)____________? அவனுக்கு நான் ஒரு பரிசு தரப்போகிறேன்," என்றார். பின்னர், அவர் தன் கையில் உள்ள மோதிரத்தை (Q31)____________. "இந்த மோதிரம்தான் பரிசு," என்றார். சரவணன் என்ற சிறுவன் அந்த மோதிரத்தைத் தானே பெறவேண்டும் என்று நினைத்தான். அதற்கு என்ன வழி என (Q32)____________ தொடங்கினான். சரவணன் தன் தாத்தாவிடம், "நான் முயற்சி செய்கிறேன். அதற்கு உங்கள் மோதிரம் தேவை," என்று கூறினான். அவரும் மோதிரத்தைத் தந்தார். மோதிரத்தைத் தரையில் வைத்து அதன்மேல் ஒரு கிண்ணத்தை வைத்து மூடினான். பின்னர் மற்ற சிறுவர்களைப் பார்த்து, "இந்தப் பாத்திரத்தைத் தொடாமல் மோதிரத்தை எடுத்தால் நான்தான் அறிவில் சிறந்தவன் என்று (Q33)____________?" என்று கேட்டான். மற்ற சிறுவர்கள் அதற்குச் சம்மதித்தார்கள். | Q30 (   )<br>Q31 (   )<br>Q32 (   )<br>Q33 (   ) |
| சரவணன் பாத்திரத்தின்மேல் கைகளை நீட்டி, "மோதிரமே! வெளியே வா," என்று உரக்கக் கத்தினான். பின்னர், "மோதிரம் வெளியே வந்துவிட்டது," என்று கூறினான். மாதவன் என்ற சிறுவன், "நீ சொல்வதை நான் (Q34)____________!" என்று கூறியவாறு கிண்ணத்தைத் தூக்கினான். சரவணன் அப்போது சட்டென்று மோதிரத்தைக் கையில் எடுத்தான். "பார்த்தீர்களா? பாத்திரத்தைத் தொடாமல் மோதிரத்தை நான் எடுத்துவிட்டேன்," என்று (Q35)____________ சொன்னான். வேலப்பன் அவனுடைய அறிவுக்கூர்மையைப் பாராட்டினார். மோதிரத்தைச் சரவணனுக்குப் பரிசாகத் தந்தார். | Q34 (   )<br>Q35 (   ) |

| | | |
|---|---|---|
| (1) ஒப்புக்கொள்கிறீர்களா | (2) புத்திசாலி | (3) ஆர்வத்துடன் |
| (4) ஏற்றுக்கொள்கிறேன் | (5) தந்தார் | (6) நம்பமாட்டேன் |
| (7) போக்க | (8) கழற்றினார் | (9) கூறுகிறீர்களா |
| (10) நீக்க | (11) பெருமையுடன் | (12) சிந்திக்க |

**D8 சுயவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

ஒரு பழத்தோட்டத்தில் பல விதமான பழங்கள் காய்த்துத் தொங்கிக்கொண்டிருந்தன. வழக்கமாகத் தோட்டத்திற்கு வருகின்ற அணில்கள் பழங்களை எல்லாம் கண்டபடி கடித்துக் குதறியவாறு சாப்பிட்டன.

பழங்களை எல்லாம் அணில்கள் சேதப்படுத்துவதைத் தோட்டக்காரர்கள் இருவர் பார்த்துவிட்டனர். உடனே ஒருவர் மற்றொருவரைப் பார்த்து, "இதோபார்! நாம் தோட்டத்துப் பழங்களின்மீது மருந்தினைத் தெளிப்பதைத்தவிர வேறு வழி இல்லை. அப்போதுதான் இந்த அணில்களின் தொல்லைகளில் இருந்து பழங்களைக் காப்பாற்ற முடியும்," என்று கூறினார். அதனைக் கேட்ட இன்னொருவரோ "நாம் அவசரப்பட வேண்டாம். இரண்டு நாட்கள் பொறுமையாக இருந்து அணில்கள் மீண்டும் வருகிறதா என்று பார்ப்போம். மறுபடியும் அணில்கள் தொல்லை செய்தால் உடனே மருந்து தெளித்துவிடுவோம்," என்று கூறினார்.

தோட்டக்காரர்களின் பேச்சைத் தோட்டத்தில் இருந்த வண்டும் கிளிகளும் கேட்டுவிட்டன. தோட்டக்காரர்கள் வெளியே செல்லும் வரையிலும் அவை பொறுமையாகக் காத்துக்கொண்டிருந்தன. தோட்டக்காரர்கள் வெளியே சென்றதும் அணில்களின் பக்கமாக வந்தன. முதலில் கிளிகள் அணில்களிடம் "அணில்களே! உங்கள் தொல்லை தாங்க முடியாத காரணத்தால் தோட்டக்காரர்கள் பழங்களின்மீது மருந்து தெளிக்கப் போகிறார்களாம். நாங்கள் இந்தத் தோட்டத்துப் பழங்களை உணவாக உண்டு இதனையே நம்பி வாழ்கிறோம். மருந்து தெளிக்கப்பட்டால் எங்களால் பழங்களைச் சாப்பிட முடியாது. அதனால், தயவு செய்து எங்கள் வாழ்க்கையைக் கெடுக்காமல் இருப்பதற்கு பழங்களைச் சேதப்படுத்துவதை விட்டுவிடுங்கள்," என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டன.

அப்போது முரட்டு அணில் ஒன்று கிளிகளிடம் "கிளிகளே! நாங்கள் ஏன் பழங்களைச் சேதப்படுத்தக்கூடாது? எங்களுக்குப் பழங்களைச் சேதப்படுத்த உரிமை இல்லையா? நாங்கள் எங்கள் வழியில்தான் செயல்படுவோம். நீ வேண்டுமானால் உனது கூட்டத்தைக் கூட்டிக்கொண்டு வேறு இடத்திற்குச் சென்றுவிடு," என்றது.

முரட்டு அணிலின் பேச்சுக்கு எதிர்பேச்சு பேச முடியாமல் கிளிகள் எல்லாம் அச்சத்தால் நடுங்கியபடி இருந்தன. அந்த நேரத்தில் வண்டு மெல்ல முரட்டு அணிலின் பக்கத்தில் வந்தது. அது அணிலைப் பார்த்து, "கிளிகள் வேண்டுமானால் உன்னைப் பார்த்துப் பயப்படலாம். ஆனால், நான் பயப்படமாட்டேன். இந்தக் கிளிகள் பல ஆண்டுகளாக இந்தத் தோட்டத்தில் வசித்து வருகின்றன. நீயும் உன் கூட்டத்தினரும் ஒரு வாரமாகத்தான் இந்தத் தோட்டத்திற்கு வந்து பழங்களைச் சாப்பிடுகிறீர்கள். அதனால், நீங்கள் அனைவரும் உடனே இங்கிருந்து சென்றுவிட வேண்டும். இல்லை என்றால் நான் என் நண்பர்களை அழைத்து வந்து உங்களை விரட்டிவிடுவேன்" என்று மிரட்டியது.

வண்டின் கம்பீரமான பேச்சைக் கேட்ட முரட்டு அணில் பயந்தது. அது வண்டால் தனக்கும் தன் கூட்டத்திற்கும் ஆபத்து வரலாம் என்று எண்ணியது. அது இந்தத் தோட்டத்தை விட்டுச்செல்வதுதான் நல்லது என்று முடிவு எடுத்தது. உடனே தனது கூட்டத்தினரை அழைத்துக்கொண்டு அந்தத் தோட்டத்தை விட்டு வெளியேறியது.

36 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது ( 20 மதிப்பெண்கள்)

36. தோட்டக்காரர்கள் எப்படிப் பழங்களைக் காப்பாற்ற நினைத்தனர்? ( 2 ம )

37. தோட்டக்காரர்களில் ஒருவர் ஏன் உடனே மருந்து தெளிக்க வேண்டாம் என்று கூறினார் ? ( 4 ம )

38. கிளிகள் எதனால் அணில்களிடம் பழங்களைச் சேதப்படுத்த வேண்டாம் என்று கெஞ்சின ? ( 4 ம )

39. முரட்டு அணில் ஏன் தோட்டத்தை விட்டுச் செல்ல முடியாது என்று கூறியது ? ( 3 ம )

40. (அ) வண்டு எப்போது கிளிகளுக்காக முரட்டு அணிலிடம் பேசியது ? ( 2 ம )

(ஆ) கிளிகளுக்குத்தான் தோட்டத்தில் தங்கும் உரிமை உள்ளது என்று வண்டு கூறக் காரணம் என்ன ? ( 3 ம )

41. முரட்டு அணில் எதனால் தோட்டத்தை விட்டுச் செல்ல முடிவு செய்தது ? ( 2 ம )

# P5 SA2
# TESTPAPER 11

பார்த்திபன் ஒரு நிறுவனத்தில் ...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 2 | 2) 1 | 3) 4 | 4) 3 | 5) 1 | 6) 3 |
| 7) 2 | 8) 3 | 9) 1 | 10) 3 | 11) 4 | 12) 2 |
| 13) 2 | 14)1 | 15) 3 | 16) 4 | 17) 3 | 18) 2 |
| 19) 4 | 20) 3 | 21) 2 | 22) 3 | 23) 1 | 24) 10 |
| 25) 5 | 26) 8 | 27) 1 | 28) 7 | 29) 7 | 30) 2 |
| 31) 8 | 32) 12 | 33) 1 | 34) 6 | 35) 11 | |

36) அணில்கள் தொல்லை செய்ததால் தோட்டக்காரர் பழங்களின் மீது மருந்து தெளித்து பழங்களைக் காப்பாற்ற நினைத்தார்.

37) தோட்டக்காரர்களில் ஒருவர் இரண்டு நாட்கள் பொறுமையாக இருந்து அணில்கள் வருகிறதா என்று பார்த்து விட்டு, அணில்கள் மீண்டும் தொல்லை செய்தால் உடனே மருந்து தெளிக்கலாம் என்று கூறினார்.

38) கிளிகள் தோட்டத்துப் பழங்களை உணவாக உண்டு அதனையே நம்பி வாழ்கின்றன. மருந்து தெளிக்கப்பட்டால் அவற்றால் பழங்களைச் சாப்பிட முடியாது. அதனால் அவை அணில்களிடம் பழங்களை சேதப்படுத்த வேண்டாம் என்று கெஞ்சின.

39) முரட்டு அணில் தங்களுக்குப் பழங்களைச் சேதப்படுத்த உரிமை இருக்கிறது என்பதால் அவை தம் வழியில் தான் செயல்படும் என்று கூறியது.அதனால் தான் அது தோட்டத்தை விட்டு செல்ல முடியாது என்று கூறியது.

40) அ. முரட்டு அணிலின் பேச்சுக்கு எதிர்பேச்சு பேச முடியாமல் கிளிகள் எல்லாம் அச்சத்தால் நடுங்கியபடி இருந்த போது வண்டு கிளிகளுக்காக முரட்டு அணிலிடம் பேசியது.

ஆ. கிளிகள் பல ஆண்டுகளாகத் தோட்டத்தில் வசித்து வருகின்றன. அணில் ஒரு வாரமாகத்தான் தோட்டத்திற்கு வந்து பழங்களைச் சாப்பிடுகின்றன. அதனால், கிளிகளுக்குத்தான் தோட்டத்தில் தங்கும் உரிமை உள்ளது என்று வண்டு கூறியது.

41) வண்டின் கம்பீரமான பேச்சைக் கேட்டு முரட்டு அணில் அஞ்சியது. அது வண்டால் தனக்கும் தன் கூட்டத்திற்கும் ஆபத்து வரலாம் என்று நினைத்தது. அதனால் தோட்டத்தை விட்டுச் செல்ல முடிவு செய்தது.